1981 மார்ச் 27]

ஊத்தங்கரைப் பகுதியில் கிடைக்கும் செம்புத்தாது

* வினா எண் 522—திரு. க. இர. சின்னராசு: : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தர்மபுரி மாவட்டம் ஊத்தங்கரை பகுதிகளில் செம்பு கிடைக்கிறது என்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில் அங்கு எவ்வளவு செம்பு கிடைக்கிறது ?

(இ) அதை எடுக்கும் திட்டம் அரசுக்கு உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (அ) ஆம். தர்மபுரி மாவட்டம், ஊத்தங்கரை பகுதியை அடுத்த சாமல்பட்டிக்கு அருகில் போக்கம்பட்டி மற்றும் மோட்டு சூலக்கரை கிராமங்களைச் சுற்றியுள்ள பகுதிகளில் விட்டு விட்டு அமைந்துள்ள செம்பு கனி அமைப்பு கண்டுபிடிக்கப்பட்டது.

(ஆ) மற்றும் (இ) : முழுமையான ஆய்வுகளிலிருந்து கிடைககப்பட்ட அறிக்கையின்படி ஆழ் துறப்பண துளைகளிலிருந்து எடுக்கப்பட்ட தாதுவின் மாதிரிகள் இரசாயன சோதனைகளில் மிகக் குறைந்த அளவு செம்புத்தாது (0·1—0.2% விழுக்காடு) மட்டுமே கொண்டிருந்ததாகக் கண்டு பிடிக்கப்பட்டது. இந்தச் செம்புத்தாது அமைப்பு, பொருளாதார ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்தது அல்ல என கைவிடப்பட்டது.

திரு. க. ரா. சின்னராசு : பேரவைத் தலைவர் அவர்களே, ஊத்தங்கரைப் பகுதியை அடுத்த சாமல்பட்டிக்கு அருகில் செம்பு கிடைப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவர்கள் சொல்லுகின்றபோது 0.2% விழுக்காடு கிடைக்கின்றது என்று சொல்லி, அந்தத் திட்டம் கைவிடப்பட்டதாகச் சொல்லுகிறார்கள். மேலும் நமது அரசு அப்பகுதியை நல்ல முறையில் விரிவாக ஆய்வு செய்வதற்கு மறுபரிசீலனை செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே ஆய்வு செய்யப்பட்டதன் அடிப்படையிலே அங்கே 0.2% விழுக்காடு இருக்கின்றது என்ற முடிவிற்கு வந்து, அந்தத் திட்டம் கைவிடப்பட்டது. எனவே, அதைத் திரும்பவும் ஆய்வு செய்யும் உத்தேசம் இல்லை.

தோட்டி, கொம்பன், ஜோதி சமுதாய மக்களை பழங்குடி மக்களாக அறிவித்தல்

*வினா எண் 523—திரு பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு ஆதித்திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தஞ்சை, திருச்சி மாவட்டங்களில் வசிக்கும் தோட்டி, கொம்பன், ஜோகி என்றழைக்கப்படும் தெலுங்கு பேசுகின்ற காட்டுநாயக்கன் சமுதாய மக்களை, பழங்குடி மக்களாக அறிவிக்கு மாறு தஞ்சை, திருச்சி மாவட்ட மகாசபையின் தீர்மானம் அரசுக்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அரசு இதன் மீது என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : (அ) ஆம்.

(ஆ) '' காட்டுநாயக்கன் '' இனம் பழங்குடியினர் பட்டியலிலும் '' தோட்டி '' தாழ்த்தப்பட்டோர் பட்டியலிலும், '' கொம்பன் '' குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோர் பட்டியலிலும் சேர்க்கப்பட்டுள்ளனர். சாதிச் சான்றிதழ் வழங்கும் அதிகாரி, ஒருவர் இன்ன இனத்தைச் சேர்ந்தவர் என்று உள்ளூரில் விசாரித்து தமக்கு ஏற்புடைத்தாயின் அவர் இன்ன இனத்தவர் என்று சான்றிதழ் வழங்க வேண்டும் என்று அரசு ஆணையிட்டுள்ளது. எனவே, கோரிக்கை ஏற்கத் தகுந்ததல்ல.

திரு பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த காட்டுநாயக்கன் சமுதாயமானது குறிப்பாக திருச்சி, தஞ்சை மாவட்டங்களிலும், இதைத் தவிர எல்லா மாவட்டங்களிலும் இருக்கிறார்கள். ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒவ்வொரு வித ஜாதியாக, அந்தந்த ஏரியாவில் அறிவிக்கிறார்கள். குறிப்பாக, திருநெல்வேலி மாவட்டத்தில் இந்த காட்டுநாயக்கன் இனம் ' குழுவர் ' என்று சொல்லப்படுகிறது. இதனால், இவர்களுக்கு கிடைக்க வேண்டிய சலுகைகள் கிடைக்காத காரணத்தினால், இந்தச் சமூகத்தினர் அவர்கள் சொல்லுகின்ற அடிப்படையில் இவர்களுக்கு சலுகைகள் அளிக்க அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு தலைவர் அவர்களே, இப்போது குறிப்பிட்டுள்ளது இந்திய அரசியல் சட்ட 341 (1) பிரிவின்படி ஒரு இனத்தவர் அந்த மாநிலத்தின் ஆளுநர் அவர்களைக் கலந்து, ஜனாதிபதி அவர்கள் தாழ்த்தப்பட்ட, பழங்குடியினர் பட்டியலில் சேர்க்கலாம் என்ற அடிப்படையிலே இவர்கள் குறிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் எடுத்துச் சொன்னதைப் போன்று, பல்வேறு பகுதிகளிலேயிருந்து எனக்கும் இதுபோன்று எடுத்துச் சொல்லப்பட்டிருக்கின்றன. துறை இயக்குநர் இதுபற்றி அரசுக்குப் பரிந்துரை செய்து அனுப்பும்படி கேட்டுக் கொள்ளப்படுவார் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் ஏற்கெனவே மிகவும் பின்தங்கிய பழங்குடி மக்கள், அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய சலுகைகள் காலா காலத்திலே கிடைக்கவில்லை. சீக்கிரம் முடிவு எடுத்து இதை அறிவிக்க அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ளும்.

1981 மார்ச் 27]

[முற்பகல் 10–20]

திரு. வ சத்திய மூர்த்தி : பேரவைத் தலைவர் அவர்களே, காட்டுநாயக்கன், தோட்டி போன்றவர்களைப் போல், சலவைத் தொழிலாளர்களையும், சவரத் தொழிலாளர்களையும் ஆதி திராவிடர் இனத்தோடு சேர்க்க வேண்டுமென்ற கோரிக்கை. (மணி அடிக்கப்பட்டது.)

சென்னை அரசு அச்சகத்திலுள்ள இயந்திரங்கள்

*வினா எண். 524—திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சென்னையில் உள்ள அரசு அச்சகத்தில் இயந்திரங்கள் பல பழுதுபட்டோ அல்லது வேலைக்குப் பயன்படுத்தப்படாமலோ இருந்து வருவது உண்மையா ?

(ஆ) ஆம், எனில் அதற்கான காரணங்கள் என்ன ?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : (அ) ஆம்.

(ஆ) இயந்திரங்களை உபயோகத்தில் கொண்டு வருவதற்கான காலதாமதத்திற்கு அடிப்படைக் காரணம் அவை அயல் நாடுகளில் செய்யப்பட்டதால், அவைகளின் உதிரி உறுப்புக்கள் (Spare parts) இங்கு கிடைப்பது இல்லை.

திரு. து. புருஷோத்தமன் : பேரவைத் தலைவர் அவர்களே, எத்தனை இயந்திரங்கள் பழுதுபட்டிருக்கின்றன ? வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட எத்தனை இயந்திரங்கள் பயன்படுத்தப்படாமல் இருக்கின்றன ? அவற்றின் மதிப்பு எவ்வளவு என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிக்க இயலுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : பேரவைத் தலைவர் அவர்களே, என்னிடத்தில் உள்ள குறிப்பின்படி 14 இயந்திரங்கள் பழுதடைந்த நிலையிலே இருக்கின்றன. அவைகளின் மதிப்பு கொடுக்கப்படவில்லை.

திரு து. புருஷோத்தமன் : பேரவைத் தலைவர் அவர்களே, எத்தனை ஆண்டுகளாக அந்த இயந்திரங்கள் பயன்படுத்தப்படாமல் இருக்கின்றன என்பதை அறிவிக்க இயலுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 14 இயந்திரங்களில் ஏறத்தாழ 11 இயந்திரங்கள் பெரும் பழுதடைந்தவையாக இருக்கின்றன. 1972-க்குப் பின் தான் இந்த நிலை இருந்து வருகின்றது.